DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.119/2025
Prosecution Witness P.W.14

| | |
|---|---|
| Name : **திரு.Dr.வைத்தீஸ்வரன்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 28.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 07.11.2024 ஆம் தேதியன்று அவசர சிகிச்சை பிரிவில் நான் பணியில் இருந்தபோது தேனி பழனிசெட்டிபட்டி காவல் நிலைய தலைமை காவலர் அண்ணாதுரை என்பவர் இறந்து போன பழனிசெட்டிபட்டி மகாத்மா காந்தி தெருவைச் சேர்ந்த 42 வயது உடைய போஜராஜன் மகன் தாமோதரன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக சவக்கிடங்கில் வைக்க வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். நான் பிரேதத்தை பரிசோதனை செய்து, அங்கமச்ச அடையாளங்களை சரிபார்த்து விபத்து பதிவேட்டில் பதிவு செய்து மேற்படி பிரேதத்தினை பிணவறையில் வைக்க நடவடிக்கை மேற்கொண்டேன். ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார். நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ. 12.

**எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

**3– ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அன்றைய தினம் பிரேதத்துடன் ஒரு போலீசார் மட்டுமே வந்தார்கள் என்றால் சரிதான். நான் பிரேதத்தை பிணவறைக்கு அனுப்பிய பிறகு எனது

அனுமதி இல்லாமல் வேறு யாரும் அந்தப் பிரேதத்தை பார்க்க முடியாது என்றால் சரிதான்.

**மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்கண்ட குறுக்கு விசாரணை தங்கள் குறுக்கு விசாரணையாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.28 16:02:37 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.